**மத்திய சுற்றாடல் அதிகாரசபையிம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு**

-----------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய முன்னைய காலப் பகுதியில் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,778,846 வரவு மீதியும், ரூபா 849,063 தொகையான செலவிடல்களுக்கும் உரிய கொடுக்கல் வாங்கல்கள் பிற்போட்ட ரீதியில் சீராக்கி இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 54 ஆவது பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களுக்குரிய விடயங்கள் சரியான பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த காணி தொடர்பாக சகல விடயங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தினால் ரூபா 315,490 வருடாந்த வாடகையின் அடிப்படையில் குத்தகைக்குப் பெறப்பட்ட காணியொன்றின் விபரங்கள் மாத்திரம் காணி விபரங்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பெத்தியாகந்த கூட்டுப்பசளை தளத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,820,000 தொகையான வருடாந்த வாடகையொன்றை செலுத்துவதன் கீழ் வாடகை அடிப்படையில் காணி மறுசீரமைத்தல் ஆணைக்குழுவில் இருந்து ரூபா 47 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியில் பெறப்பட்டிருந்த 23 ஏக்கர் 01 ரூட் 30.45 பேர்ச் அளவான காணியின் உரித்து 2017 ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய வாடகை ரூபா 9,400,000 ஆகும். எனினும், இந்த தொகையை செலுத்துவதற்காக | செயற்பாட்டு குத்தகை தொடர்பான உரிய விடயங்கள் சரியான பிரகாரம் 2021 ஆம் ஆண்டு முதல் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தேவையான நிதி ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், வாடகை எடுத்தல் தொடர்பாக விபரங்கள் எதுவும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகன புகை பரிசோதனை நிதியத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 82,752,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் புகை நிலைமையை அளவிடும் 02 அலகுகள் 2020 நவம்பர் 20 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதிகார சபையின் பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை கணிப்பிடும் போது சொத்தொன்று பாவனைக்கு எடுக்கப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படுவதுடன், அதன் பிரகாரம் இந்த சொத்துக்காகவும் பயன்படுத்தப்பட்ட திகதி முதல் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடமாகக் கருதி பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட நிலைமையின் கீழ் சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பிடும் போது சொத்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத காலமும் கவனத்தில் கொள்ளப்பட்டு பெறுமானத் தேய்வு விகிதம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகன புகை பரிசோதனை நிதியத்தின் மூலம் இந்த புகை நிலைமைகளை அளவிடும் 02 அலகுகள் அதிகாரசபையின் பிரதான அலுவலகத்திலும், மத்திய மாகாண அலுவலகத்திலும் 2018 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், எங்கள் அதிகார சபைக்கு எழுத்து மூலம் கையளித்தல் (உரித்தை கையளித்தல்) 2020 நவம்பர் 20 ஆம் திகதியே இடம்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் உரித்து சரியான பிரகாரம் மாற்றப்பட்ட திகதி முதல் பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் அதிகார சபையின் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 21,727,678 கிரயமான மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிள் மாத்திரம் ரூபா 10,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கூறப்பட்ட மோட்டார் வாகனத்துடன் ரூபா 500,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த லொறி வாகனம் ஒன்றின் மீள்மதிப்பீட்டு பெறுமதி மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் மோட்டார் வாகன பெறுமதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான அலுவலகத்தில் மோட்டார் சைக்கிள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிர்வாக பிரிவின் மூலம் ஏனைய மோட்டார் சைக்கிள்கள் செயற்படு நிலையில் இல்லாதிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதனை மேலும் பரீட்சித்து மோட்டார் சைக்கிள்களுக்காக மீள்மதிப்பீட்டு பெறுமதியொன்று காணப்படுமாயின் 2021 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 35,968,846 தொகையான மீண்டெழும் மானியம் வருமானமாக இனங்காணப்படாமல் பொறுப்புக்களின் கீழ் பிழையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீண்டெழும் மானியக் கணக்கின் மீதியான ரூபா 36,120,516 பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற மிகவும் பழமையான மீதியாகும். இந்த பெறுமதி தொடர்பாக மேலும் கணக்கீட்டு புத்தகங்கள், ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு அவ்வாறான பழைய மீதி வருடாந்த செயலாற்றல் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சுற்றாடல் அச்சுறுத்தல் மதிப்பீட்டு சேவை (EIA) வழங்குவதற்காக பெறுவனவு சேவைகள் முடிவுறும் வரை செலுத்த வேண்டிய பணமாக | சுற்றாடல் அச்சுறுத்தல் மதிப்பீட்டு கட்டணங்கள் உரிய சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டதன் பின்னரே | தகவல்களை பெற்று உரிய சீராக்கங்களை இறுதிக் கணக்குகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 140,432,753 தொகை நடைமுறை பொறுப்பின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 33,682,272 தொகை 05 காலத்தையும் விஞ்சியிருந்தது, இந்த சுற்றாடல் அச்சுறுத்தல்களின் மூலம் உருவாகின்ற அதிகார சபையின் வருமானம் சரியாக இனங்கண்டு வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைக்க முடியுமாக இருந்தது. இந்த தீர்த்து வைத்தலுக்காக மாகாண மட்டத்தில் தகவல்கள் கோரப்பட்டு அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததா என விசாரணை மேற்கொண்டதன் பின்னர் கட்டணங்கள் தீர்த்து வைக்கப்படுகின்றது. இந்த ஆண்டின் போது அவ்வாறு செய்வதற்கு தகவல்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் முன்னைய ஆண்டின் போதான அந்த பெறுமதியை பெற்று வருமானத்திற்கு செலவில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பொருள் கட்டளைகள் மேற்கொள்ளப்படாமலும், உத்தரவாதம் இல்லாமலும் ரூபா 18,455,380 தொகை வழியில் நின்ற இருப்பாகவும் மற்றும் கடன்கொடுத்தோராக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த அளவில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | வழியில் நின்ற இருப்புக்கள் மற்றும் பூர்த்தி அடையும் நிலையில் வேலைகள் கணக்கில் மூலதன வடிவத்தில் உள்ள கொள்வனவுகளாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் அந்த சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்த சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய நிலைக்கு கொண்டுவரும் வரை இவ்வாறு வழியில் நின்ற இருப்பு மற்றும் பூர்த்தி அடையும் நிலையில் காணப்படுகின்ற வேலைகள் (Good in Transit and Work – in Progress) ஆக கணக்குகளில் காண்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் உரிய சொத்துக்களின் உரித்தை மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பெறுமதி சேர் வரி பொறுப்பு கணித்தலில் வழுவின் காரணமாக ஆண்டின் இறுதியின் போது செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புக்கள் ரூபா 696,282 இனால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக சரியான பிரகாரம் சீராக்கங்களை மேற்கொண்டு செலுத்துவதற்கோ அல்லது அறவிடுவதற்கோ 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இரத்தினபுரி அலுவலக கட்டிட தொகுதியின் திட்டமிடல் நிர்மாணத்திற்காக 2018 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,675,350 தொகை பூர்த்தியடையாத வேலையாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அது நடைமுறைச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இரத்தினபுரி அலுவலக கட்டிடத் தொகுதியின் திட்டமிடல் நிர்மாணத்திற்காக ரூபா 1,675,350 தொகை 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கட்டிட தொகுதியை நிர்மாணிப்பதற்கு பொதுத் திறைசேரியில் இருந்து நிதி ஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. அதனால் அந்த பெறுகை நடவடிக்கைளை ஆரம்பிக்கும் வரை மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக அந்த கொடுப்பனவுகள் பூர்த்தியடையாதவையாக கணக்கீடு செய்வதற்கு முன்னர் கொடுப்பனவாக காட்டுதல் பொருத்தமானதாகும். அந்த அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பெறுகைகளை ஆரம்பித்தவுடன் அதனை முற்கொடுப்பனவு பூர்த்தியடையாத கணக்கிற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | அதிகாரசபையினால் இறுதி கணக்குகளுக்கு உரிய பரீட்சை மீதி தயாரிக்கும் போது இனங்காணப்படாத கணக்கிற்குரிய ரூபா 6,000,000 பெறுமதியொன்று மீதியாக கருதி சமப்படுத்தப்பட்ட போதிலும், அதற்காக தேவையான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட 2020 இன் பரீட்சை மீதியில் ரூபா 6,000,000 தொகை பரீட்சை மீதியில் இனங்காணப்படாத கணக்கொன்று காணப்படவில்லை. | ஒவ்வொரு மீதிகளுக்கும் உரிய உறுதிப்படுத்தல் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுலா சட்டம் | | | |
| i. (7) ஆம் பிரிவு | சுற்றாடல் சபைக்காக நியமிக்கப்பட்ட சகல அங்கத்தவர்களும் மீளாய்வாண்டின் கூட்டத்திற்காக பங்குபற்றியிருக்க வில்லை. இதன் பிரகாரம் சுற்றாடல் சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அங்கத்தவர்களின் பங்களிப்பு பெறப்பட்டிருக்கவில்லை. | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், பணிப்பொறுப்புக்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அதிகாரசபையினால் சபைக்கு அனுப்பப்பட்ட ஏதாவது விடயங்கள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு ஆலோசனை வழங்குதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் சுற்றாடல் சபை தாபிக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் பிரகாரம் அதற்காக 30 அங்கத்தவர்கள் கௌரவ சுற்றாடல் அமைச்சரின் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்தனர். கடந்த 2020 திசெம்பர் மாதத்தில் முடிவடைந்த 13 ஆவது சுற்றாடல் சபை அமர்வுக்காகவும் 27 அங்கத்தவர்களிளைக் கொண்ட சுற்றாடல் சபை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் | சுற்றாடல் சபைக்காக சகல அங்கத்தர்களினதும் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போது உலகம் முழுவதும் covid 19 பரவலடைந்தமை, மார்ச் மாதம் 13 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அவ்வப் போது நாட்டை மூடியமை (lockdown) அந்த ஆண்டில் கூட்ட அமர்வுகளை கோருதல் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | |
| ii. | (7) (3) ஆம் பிரிவு | தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சபையின் இலக்குகள் காண்பிக்கப்பட்டதுடன், தேசிய சுற்றாடல் சபையின் கலந்துரையாடலுக்கு உட்பட்ட பின்வரும் விஷேட விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முள்ளுத்தேங்காய் சம்பந்தமான இந்த ஆண்டின் போது கீழே குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். | சுற்றாடல் விடயங்கள் தொடர்பான உரிய தீர்மானங்கள் கால ரீதியில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | a. முள்ளுத்தேங்காய் முகாமைத்துவம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால திட்டங்களை அமுல்படுத்துதல். | * முள்ளுத்தேங்காய் பயிர் செய்யப்பட்டுள்ள காணிகளில் முள்ளுத்தேங்காய் மரங்களை கிரமமாக அகற்றி இறப்பர் அல்லது ஏனைய நீர்த் தன்மையை பாதுகாக்கின்ற பயிர் செய்கைகளை ஆரம்பிக்குமாறு 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை திட்டமிடல், தொடர்புபடுத்துதல் | |

ஊடாக உரிய நிறுவனங்களின் பங்குபற்றலுடன் ஆரம்ப கூட்டமொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவரின் முன்னிலையிலும், ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடனும் 2021 மே 03 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நடத்தப்பட்டிருந்தது.

* உள்ளக நிறுவனங்களை தொடர்புபடுத்தும் குழுவொன்றை ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்கு மேற்கூறப்பட்ட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

* 2020 மே 11 ஆம் திகதி சுற்றாடல் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் போன்ற அமைச்சுக்களின் செயலாளர்களின் தலைவர்களுடனும், ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடனும் உள்ளக நிறுவனங்களை இணைத்து குழுவின் முதலாவது கூட்டத்தை நடாத்துவதற்கு சுற்றாடல் அமைச்சினால் நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டிருந்தது. நாட்டில் காணப்படுகின்ற கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சுற்றாடல் அமைச்சினால் அந்த கூட்டம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் அதனை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | b. | வெடி பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது டெசிபல் அளவொன்றை உள்ளடக்கிய நிபந்தனையொன்றை உள்ளடக்குதல். | வெடி பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது ஒலி மாசுறுவதை கட்டுப்படுத்துவதற்காக தற்போது டெசிபல் அளவு உள்ளடக்கிய நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இது தொடர்பாக தொடர்ந்தும் அமுல்படுத்துமாறு மாகாண அலுவலகங்களுக்கு அறிவிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| | c. | புகை பரிசோதனை நிலைமையினை பரீட்சிக்கின்ற இயந்திரங்களின் கிரயம் உள்நாட்டு ரீதியில் மேற்கொள்ள முடியாதிருக்குமாயின் அதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான படிமுறைகளை எடுத்தல். | காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும். புகை பரிசோதனை நிலையினை பரீட்சிக்கின்ற இயந்திரங்களின் சேவை பராமரிப்பிற்காக தேவையான பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| iii. | 23 (ஐ)(2) ஆம் பிரிவு. | ஒலி மாசுறுவதை கட்டுப்படுத்துதல் தொடர்பான பிரமாணங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | காண்பிக்கப்பட்டுள்ள விடயம் சரியானதாகும். தற்போது மத்திய சுற்றாடல் அதிகார சபை ஒலி மாசுறுவதை கட்டுப்படுத்தும் பிரமாணத்தை திருத்துவதற்காக வெளி மதியுரையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 06 ஆம் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு. | 2019 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன் கௌரவ அமைச்சரின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளும் கலந்துரையாடலுக்காக திகதி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 இன் வருடாந்த அறிக்கையின் 05 சிங்கள பிரதிகள் 2021 மார்ச் 23 ஆம் திகதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கையை குறித்த காலத்தில் சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 15 ஆம் திகதிய DMA/SP/2015/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | பொருள் மெய்மெய்யாவின் போது ஏனைய சொத்துக்களைப் போல் வாகனங்கள் தொடர்பாகவும், பௌதீக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், வாகனங்கள் தொடர்பான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் சகல வாகனங்களும் பௌதீக ரீதியில் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மெய்யாவின் போது வாகனங்கள் தொடர்பாக பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2008 சனவரி 26 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானி பத்திரம் | இலங்கையின் 18 மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 83 புகை பரிசோதனை நிலையங்கள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செல்லுபடியான சுற்றாடல் | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தரவு முறைமையின் பிரகாரம் புதிதாக இனங்காணப்பட்ட, கைத்தொழில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் செயற்பாட்டின் கீழ் தொழிற்சாலையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. | செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோப்பது தொடர்பாக காலரீதியில் மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் இன்றி செயற்படுத்தும் நிலையில் காணப்பட்டது. கொழும்பு மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 26 புகை பரிசோதனை நிலையங்களில் 23 இற்காக செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் காணப்படவில்லை. | அந்த கைத்தொழில்கள் NP(New Processing) கீழ் உரித்தாகுவதுடன், 2020 ஆம் ஆண்டின் போது அவ்வாறான 1078 கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திர செயற்பாடுகளுக்கு அனுப்பப்பட்டு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 135,512,005 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 71,973,628 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 63,538,377 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய செயற்பாட்டு வருமானங்களில் குறைவொன்று பிரதன காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு 2004 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்வேறு தரப்பினரால் நன்கொடை அளிக்கப்பட்ட கூட்டுப்பசளை பாத்திரங்கள் விற்பனையின் அடிப்படையில் கிடைத்த ரூபா 7,887,531 தொகை கூட்டுப்பசளை பாத்திர ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஒதுக்கத்தின் நிதியத்தை பயன்படுத்தி மீண்டும் மக்களுக்கு கூட்டுப்பசளை பாத்திரங்களை வழங்கும் வேலைத் திட்டமொன்று அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடந்த கணக்குகளின் பரிசோதனையில் கூட்டுப்பசளை பாத்திரங்களின் ஒதுக்கம் 2004 ஆம் ஆண்டு முதல் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்வேறு தரப்பினரினால் கிடைக்கப்பெற்ற கூட்டுப்பசளை பாத்திரங்கள் (நன்கொடை) | நிதியம் குறைவான பயன்பாட்டுடன் வைக்கப்படாதிருக்க வேண்டியதுடன், உரிய செயற்திட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விற்பனையின் அடிப்படையில் கிடைத்த பணமாகும். அது பிளிசறு செயற்திட்டத்தின் அடிப்படையில் வருகின்ற நிதியமொன்றாக இல்லாதிருந்ததுடன், மேலும் கணக்குகள் பரிசோதனையின் பின்னர் 2021 ஆம் ஆண்டில் இக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ, ஆ) (1) மற்றும் (2) என்ற உப பிரிவுகளின் பிரகாரம் ஏதாவது செயற்திட்டமொன்றின் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையின் பிரகாரம் பொது மக்களுக்கு கருத்து தெரிவிப்பதற்காக சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும், பெத்தியாகந்த கூட்டுப்பசளை தளம் தொடர்பாக பொது மக்களுக்கு கருத்து தெரிவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட பொது மக்கள் எதிர்ப்பின் காரணமாக ரூபா 154,138,405 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளை தளம் கணக்காய்வு திகதி வரையிலும் பயன்பாடின்றி காணப்பட்டது. | மீதொட்டுமுல்லை கழிவுப் பொருள் மலை சரிவுடன் கம்பஹா மாவட்டத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை செய்வதற்காக விரைவாக கம்பஹா மாவட்டத்தில் ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த செயற்திட்டத்தின் கீழ் முதலாவதாக சேதனப் பசளை தளம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக மேல் மாகாணத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் சுற்றாடல் பரிந்துரை பெறப்பட்டிருந்தது. அதற்காக பொதுமக்களின் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த சேதனப் பசளை தளத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை ஆகக் கூடிய செயற்திறனுள்ள வகையில் பயன்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 600 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தொம்பே சுற்றாடல் கழிவகற்றல் நிலத்தை நிரப்புதல் தொடர்பாக வழங்கப்பட்ட தொழில்நுட்ப விடயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கழிவுகள் தேங்கி நின்ற Geotextile மேவுகை மீண்டும் மீளமைப்பதற்காக ரூபா 2,577,081 செலவினமொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. மேலும் இந்த நிலத்தை நிரப்பும் நாளாந்த இயலளவு 90 மெற்றிக் டொன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே 7,956 , 1,437 மற்றும் 2,284 தொன்கள் ஆகக் குறைந்த இயலளவில் கழிவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளுதல் இடம் பெற்றிருந்தது. | கழிவுப் பொருட்களின் ஆகக் குறைந்த இயலளவை வைப்பதற்கு ஏற்பட்டமையின் காரணமாக இந்த கழிவகற்றல் நிலத்தை நிரப்பும் நிர்மாணிப்பதற்கான நிதி உதவிகளை வழங்கிய KOICA நிறுவனத்தின் இந்த செயற்திட்டத்திற்காக மிகுதியாக காணப்பட்ட நிதியில் இருந்து மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் KOICA நிறுவனம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் சுற்றாடலில் பயிற்சியொன்று மற்றும் கழிவகற்றல் நிலத்தை நிரப்புவதில் காணப்படுகின்ற திருத்தங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் கழிவகற்றல் நிலத்தை நிரப்புதல் geotextile இடத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை எடுத்தல், கழிவு நீர் சுத்தகரிப்பு முறைமையில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவ்வாறே நிபுணர்களை வரவழைத்து கழிவகற்றல் நிலத்தை நிரப்பும் பதவியணியினருக்கு பயிற்சியினை வழங்குதல் போன்ற சகல நடவடிக்கைகளின் ஊடாக திருத்தியமைத்து மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை குறைவாக பயன்படுத்தாமைக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதிய கடன் உடன்படிக்கை இலக்கம் SRI - 21 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட கழிவுப் | கழிவுப் பொருள் முகாமைத்துவ அபிவிருத்தி இலக்கை அடையும் வகையில் அநுராதபுரம் கீரிக்குளம் மற்றும் காலியில் மொன்ரோச்சிய வத்தை பிளிசறு செயற்திட்டத்தின் | புதிய விடயப்பரப்பை இனங்கண்டு செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து |

பொருள் அகற்றும் வசதிகள் வழங்கும் செயற்திட்டத்திற்காக கணக்காய்வு திகதி வரையிலும் செலவிடப்பட்டுள்ள செலவினம் ரூபா 466 மில்லியன் ஆகும். ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் கேள்விக் காப்பீடு தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக செயற்திட்டத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், நிர்மாணத்திற்காக தெரிவு செய்யப்பட்ட இடத்தை மாற்ற வேண்டியிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் விடயப்பரப்பை மாற்றுதல் போன்ற காரணங்களை முதன்மையாகக் கொண்டு இந்த செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மூலம் நிர்மாணிக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பெரிய அளவிலான கூட்டுப்பசளை தளத்தின் நீடிப்பாக அந்த செயற்திட்ட காணியிலேயே கழிவகற்றும் நிலத்தை நிரப்பும் இரண்டை நிர்மாணிப்பதற்கும், ஆரம்ப திட்டங்களில் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கண்டி கோனாதிகவத்த மற்றும் பாணந்துறை மாலமுல்லை செயற்திட்ட நிலங்களுக்கு பதிலாக உத்தேசிக்கப்பட்ட மாற்று செயற்திட்ட காணியாக முறையே யாழ்ப்பாணம் கீரிமலை மற்றும் பொலன்னறுவை மீகஸ்வெவ செயற்திட்ட நிலங்களில் மேலும், கழவகற்றும் நிலங்களை நிரப்புதல் என்ற இரண்டு நிர்மாணங்களையும் செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. 2013 யூலை 23 கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் சகல நடவடிக்கைகளும் 48 மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கண்டி கோனாதிகவத்த மற்றும் மற்றும் பாணந்துறை மாலமுல்லை செயற்திட்ட காணிகளுக்காக மாற்று செயற்திட்ட காணிகளை கண்டறிவதற்கும் கண்டறியப்பட்ட அந்த மாற்று நிலங்களுக்கான திட்டங்களை தயாரிப்பதற்கும் மேலதிக காலம் எடுத்திருந்தது. மேலும், சகல திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு சிவில் நிர்மாண ஒப்பந்தகாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையின் காரணமாகக் கொண்டு 2020 யூலை வரை செயற்திட்டத்தின் வேலைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

2020 யூலை 01 ஆம் திகதி அமைச்சரவையில் இருந்து வழங்கப்பட்ட தீர்மானத்தை பின்பற்றி ஒக்டோபர் 31 ஆம் திகதி இந்த செயற்திட்டத்தை முடிவுறுத்தியதன் காரணமாக அண்ணளவாக 33 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நாளாந்தம் நகர

கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கழிவுகள் 123 மெற்றிக் டொன் அளவு சுற்றாலுக்கு சாதகமாக அகற்றும் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன. இந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 450,278,338 ஆகும்.

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,028,200 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட அதிர்வு பகுப்பாய்வு இயந்திரம் ஒரு வருட உத்தரவாத காலத்தில் அளவுத்திருத்தம் செய்ய வேண்டிய போதிலும், 2021 யூன் வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு காணப்படும் போது உபகரணங்களை கொள்வனவு செய்ததன் பின்னர் பரீட்சிக்கப்பட்ட 04 தடவைகளில் மாத்திரம் முழுமையாக மேற்கொள்ளப்பட்டதுடன், அளவுத்திருத்தம் இல்லாமையினால் செயற்பாடின்றி காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 5(2)(1)(இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகை பலவீனங்கள் தொடர்ந்தும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைக் குழு அங்கீகாரத்துடன், 2017 நவம்பர் 20 ஆம் திகதி Richy Project (Pvt) Ltd நிறுவனத்தின் மூலம் இந்த அதிர்வு பகுப்பாய்வு இயந்திரம் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது, 2018 நவம்பர் 08 ஆம் திகதி முதல் Richy Project (Pvt) Ltd நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமையினால் இந்த உபகரணங்களின் அளவுத்திருத்தம் (Calibration) தொடர்பாக பிரச்சினையொன்று எழுந்திருந்தது. இந்த உபகரணத்தை கொள்வனவு செய்யும் போது Richy Project (Pvt) Ltd நிறுவனத்தின் பரிந்துரை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டிருந்தமையினால் விசாரணை நடவடிக்கைகளுக்காக உரிய கோவைகள் அதிகார சபையின் கணக்காய்வு பிரிவினால் பல தடவைகள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.<br>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அலுவலகங்களை அவ்வப்போது மூடுவதற்கு ஏற்பட்டமையின் காரணமாக அளவுத்திருத்தம் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தாமதமடைந்திருந்தன. Richy Project (Pvt) Ltd நிறுவனம் மூடப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்குரிய சட்டரீதியான கடிதத்தின் பிரதியொன்றை அதிகார சபைக்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களின் அளவுத்திருத்தமும் சகல வரியுடன் ரூபா 412,500 மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் | சொத்துக்களை பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது அதன் முதலாவது அளவுத்திருத்தம் Richy Project (Pvt) Ltd நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடுவதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த உபகரணத்தின் அளவுத்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதிர்வு அச்சுறுத்தல் மற்றும் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி அதன் மூலம் நலன்களை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.